
"கீதாச்சாரம்"
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

# “கீதாச்சாரம்”!

# பொருளடக்கம்


1. கீதாச்சாரம்----------------------------------------------------------1

௨. பிரம்ம பிரபஞ்ச ரகஸ்யம்--------------------------------------------5௨


எல்லாம் நீ!



ஸத்தியம் பேசு. தர்மம் செய்.

ஓம்

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்"!

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"!

"நம்பினோர் கெடுவதில்லை"!

"தெய்வம் மனுஷ்யாணாம்"!

"யத் பாவம் தத் பவதி"!

ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம் ஓம்!

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம்"!

"அகமே ஈஸ்வரம்"!

"ஜெகம், பரமும், ஜீவர்களும்"!

"சிறிதும் இல்லை"!



(௨)

ஸ்ரீமத் பகவத் கீதா! வாசகம் ஒன்று!
உள்ளம் என்ற காட்டில், விளைந்து
வரும், பஞ்சேந்திரியங்களின்
"ஞானேந்திரியங்களின்"
தூர எறிந்துவிட்டு! செயல்களாகிய, செடி கொடிகளை வெட்டி,
"பக்தி" என்ற ஏர் கொண்டு உழுது,
"அன்பு" என்ற ஜலம் பாய்ச்சி,
ஸ்ரீபகவத் சொரூப, "நாமா" என்ற விதையை ஊன்றி,
"அஞ்ஞானம்" என்ற களையை பிடுங்கி எறிந்து,
"ஞானம்" என்ற பயிரை வளர்த்து,
"ஸ்வய அனுபவத்தில்"!
"சாயுஜ்யம்" என்னும் பலனை அனுபவித்து,
அதாவது பதரோடு கூடிய, மணியை எடுத்து, பின்
அப் "பதரை நீக்கி" "மணியை"!
மட்டும், ஏற்றுக் கொண்டு, அதாவது மணி என்ற
கைவல்யத்தை (ஜீவன்முக்தியை)
அடைந்து, நாம் நாமாய்! நமக்கு அன்னியம் இல்லாததாய்!
பிரம்மானந்தமாய் ஆகவாம்! இதம் கண்ணன் வாக்கு!



உ



இனி அதன் விளக்கம் சுருக்கமாக!

(1) உள்ளம் என்பது காடு :- பலபல ஜன்ம வாஸனையாலும், இச்ஜன்ம தொடர் பிறவி விளைந்த பழக்க, வழக்க, தீநெறிவ் விளைந்த விஷ முள் (கொடியின் / செடியின்) (பேச்சு, செய்கை) அடர்ந்த புதர் என்பதே "காடு" எனக்குறிப்பிடுகிறது! (பக்குவம் அடையாத உள்ளம்)

(2) கண்கள்! காதுகள்! நாசித்துவாரம்! சுவையின் நாக்கு! ஸ்பரிசம் என்ற தொடுதல்! இது இவ்வியலில் "ஞான"யையே பிரதானமாக குறிப்பிடுவதாகும்! ஆக இந்த ஐந்துமே, ஞானேந்திரியம் ஆகும்! ஆனால் இவ்வைந்தும், கலிதோஷ மகிமையால், "கர்மேந்திரியமாக" செயல்படுகிறது! எப்படி என்றால்?

(A) கண்கள் :- ஞானேந்திரியமாக, செயல்படுவது என்றால்? தானும் "நாமரூப" பொருள்களோ, உறவு, சுற்றம், நட்போ! "நிலையாமை"டையதாகவும், அவன் இயக்கமாகவும், அவனன்றி அணுவும் அசையாது! என்பதை காண்பதும், அப்படியே சூக்ஷ்ம கவச்சபயமின்றி உணர்வதும், ஞானேந்திரியமாகும்!
அதே கண்ணை, அஹங்கார, அதிகார, ஆதிக்க, உடைமை, உரிமையாக அபிமானமாக கண்டு விகாரமாகும்! அதனால்,



௪

"விவகாரம்" பிரச்சனைகள் அடைவது, கர்மேந்திரியம் ஆகும்!

௩ காதுகள் :— ஞானேந்திரியமாக செயல்படுவது என்றால்? அந்த "ஓசை"களையும் பொறுமையாகவும், சாந்தியாகவும், அமைதியாகவும், எல்லாம் நலமே! எல்லாம் நலமே! இது இறைவன் வாக்கே! இது இறைவன் வாக்கே! என ஓர்மித்து உணர்ந்து, அவ்விடத்து குற்றம் குறை காணாமல், எவ்வித விகார, விவகாரம் அடையாமல், எதிர் வார்த்தை பேசாமல், அமைதியில், ஆனந்தம் எய்துவது, ஞானேந்திரியம் ஆகும்! அதே காதை, எந்த ஓசைகளையும் "குற்றம் குறை" பேத உணர்வாக உணர்ந்து கேட்டு, பிரச்சினைகளை உருவாக்கி சச்சரவும் அடைவது, கர்மேந்திரியம் ஆகும்!

௪ நாசித்துவாரம் :— நாசியால் யோகம், பிராண வாயுவுடன் "பகவன்" நாமாவுடன், இணைந்து போவதும், நறுமணம், துர்வாசனை, இவ்விரண்டையும் "பேதம்" இல்லாமல், எல்லாம் நலமே என, உற்றால் ஞானேந்திரியம் ஆகும்!

காற்றுத் துருத்தி போல், புஸ் புஸ் என்று வெறுமனே, பிராண வாயுவை "வீண்" அடிப்பதும், நறுமணம் துர்வாசனைகளில் பேதம் உணர்ந்து, விருப்பு வெறுப்புடன், குணதோஷம் கருதி, ஆகுவது, கர்மேந்திரியம் ஆகும்!



உ

(5)

(D) சுவையின் நாக்கு :- இதமானதும்!

ஸத்வகுண சைவ ஆகாரமும், மிதமானதும்!

அளவோடு முறையானதும், இருக்க வேண்டும்! காரணம்?

நாம் உண்ணும் ஆகாரம், மூன்றில் ஒரு பங்கு "மனமாக" செயல்படுகிறதாலும், ஜபம் செய்து, எதை வாயில் போட்டாலும், ஸ்ரீ பகவான் "நாம" உணர்வுடன் அதாவது, ஸ்ரீ பகவத் அர்ப்பணத்துடன், போடலாம். "ருசிக்கு" அடிமையாகாமல்! "பசிக்கு" மட்டும் அளவோடு ஏற்றலும், ஞானேந்திரியம் ஆகும்!

பசிக்கு மட்டும் ஏற்காமல் ருசிக்கு மட்டும் ஏற்றுக் கொண்டு, அளவுக்கு அதிகமாக புசிப்பதும்! குணதோஷங்களை கொடுக்கும் "மனதை" கெடுக்கும், அசைவ உணவை ஏற்றலும்! விதவிதமான, ரகரகமான, உணவுகளை "கண்டவைகளை, கண்ட இடத்திலும், நேரம் காலம் தெரியாமல் "போஜனப்பிரியனை" ஏற்றல். கர்மேந்திரியம் ஆகும்!

குறிப்பு:- இந்த மனதை கெடுக்கும், அசைவ உணவு என்பது மனநாச உணவல்ல! மனதோஷகண உணவாகும்! மனதை கடிவைப்பதும்!



(6)

E) ஸ்பரிசம் :- இது தொடுவதாகும்; இக்கலியில், இம் ஸ்பரிசத்தை, ஸ்ரீமஹான்கள் ஆண், பெண் இருவரின், "குறியையே"! சுட்டிக்காட்டி, அதில் சர்வஜாக்ரதையாக இருக்க வேண்டுமென்று, எச்சரிக்கிறார்கள்.

இவ் சர்வசங்க பரித்தியாகமே, ஞானேந்திரியம் ஆகும்!

"வேகமும்"! அதன் "காமமும்"! அதன் "மோஹமும்"! அதன் "போஹமும்"! அதையே எண்ணுவதும்! கர்மேந்திரியம் ஆகும்!

மேலே சொன்ன, A. B. C. D. E. என்ற ஐந்தின் நிலையில், கர்மேந்திரியம் செயல்படாமல்! அவை ஞானேந்திரியமாக, செயல்பட்டால்! உள்ளத்தில், அறியாமையால், விளைந்த செடி, கொடி, மொட்டுகள்கள், அகற்றிய நிலையாகும்!

3) பக்தி என்ற ஏர் கொண்டு உழுது:- பக்தி என்பது, உடலால் ஸ்ரீமஹான்களிடத்தும்! ஸ்ரீபகவானிடத்தும்! "வணங்கி பணிவதையும்"! அவர்கள் ஆசி பெறுவதையும்! அவ்வாசியால்! அவன் உள்ளம் கசிந்து, கசிந்து! கனிந்து கனிந்து!!



(7)

"கண்ணா" பெருவதையும்!
ஸ்ரீமஹான்கள் வாக்கையும்! ஸ்ரீபகவானின்
ஸத்திய வாக்கையும்! கேட்பதும்! அவற்றை
பேசுவதும்! அதை போதிப்பதும்! முக்கியமாக
கொள்ளாமல்; அதை தம் சாதனையாக நிறுத்திக்கொண்டு,
"பொறுமை"யின், அனுபவத்தினால்; நாம்
பிறந்ததே! பொன், பொருள், பெண் இன்ப, போகம்
மோகம், வாழ்க்கையை "வாழ" வரவில்லை என்றும்!
ஸ்ரீபகவானை உணரவும்; அவன் கிருபையை பெற்ற ஸ்ரீமஹான்
களின், ஸத்திய வாசகத்தின்படி நடக்க வேண்டும்
என்ற "சாதனை"யாகக் கொண்டு, கருவி கரண
"ஒழுக்கமாக" சாதனையாக, இருப்பதே
"பக்தி" ஆகும்! இதையே, உள்ளத்தின் உறவு
என, ஸ்ரீமஹான்கள் சொல்வார்கள்!
(4) அன்பு என்னும் ஐந்தாம் பாயிண்ட்:- "ஸத்தியம்"
பேசுவதையே "அன்பு" எனச்சொல்லுவார்கள்!
அந்த அன்பை, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பிறருக்கு
பகிர்வதையே, "தானம்" செய்யும் நியாயம்!



(8)

இதையே, ஸ்ரீ மஹான்கள் சொல்லும்போது, ஸத்திய வாக்கை தர்மம் செய்! என பொருள்படும்! அதாவது "அன்பாய் இரு!" அன்பை தர்மம் செய்! என்றும், வேறு நாமரூப, எந்த பொருளை தர்மம் செய்வதைவிட, அன்பை தர்மம் செய்வதே மாபெரும் சாதனையாகும்! ஆகவே அன்பு, என்னும் ஜீவம் எப்படி பிரவாகம், ஆகும் என்றால்? உடலால் பணிவும்! உள்ளத்தில் கனிவும்! கருணையும்! ஆனந்தமும்! நிறைந்து "எல்லாம் நீயே! எல்லாம் நானே!" என, பணிவால் தன்மை, (அகந்தையை) அழித்துக் கொள்வதே! அன்பு என்னும் ஜீவ பிரவாகமாகும்! (அன்பின் பிரவாகம் என்னும்)

5 ஸ்ரீ பகவன் நாமா என்னும், பிரார்த்தனையை உள்ளிற வேண்டும் "இறைவா! பகவானே! கடவுளே! என்று பிரார்த்தனை" அடிக்காட்டாமல்! (காரணம், அது செயல்படாத ஒன்றாம் "உனக்காக செயல்படக்கூடிய நாமரூபம்" உள்ள, ஸ்ரீ பகவானை சுட்டிக்காட்டி, "அவனே" அந்த தேவதைகள்! என்றும், அந்த தேவதைகளும், அவன் "ஒருவனே" என்றும்,



உ

(9)

திட வைராக்கியத்தால் தெளிந்து!
அந்த முக்தியின், திட நம்பிக்கையால்,
உன்னியல்பால், வேறு கதி இல்லை!
என்றும், நீ ஆக்குவாயோ, அழிப்பாயோ அருள்
மாலிப்பாயோ, நீ எது செய்தாலும், உனக்கே அர்ப்பணம்
என, "சர்வார்ப்பணம்" செய்து விடுவது,
ஸ்ரீபகவான் என்கிற, விதையை ஊன்றுவதாகும்!

(6) அஞ்ஞானம் என்னும் களையை, பிடுங்கி எறியவேண்டும்!
"யாம்" ஓர் ஆண்! ஓர் பெண்! ஓர் குடும்பி! ஓர் சந்நியாசி!
ஓர் பந்தஜீவன்! கர்ம பாவம் செய்தவன்! எதற்குமே லாயக்கு
அற்றவன்! வேத வேதாந்த சாஸ்திரம், முறையாக கல்லாதவன்!
என இன்னும் பல பல, தகுதிகளை அட்டிக் காட்டி,
அறியாமையினால்! அதாவது தன் கவனக்குறைவால்!
தன்னை இன்னார் என அறியாமல்
"மறந்து" பிதற்றுவது, அஞ்ஞானம் ஆகும்!

"யாம்" ஸ்ரீபகவானின் குழந்தையே! அதேபோல், அனைத்து
ஜீவ கோடிகளும் ஸ்ரீபகவானின் குழந்தைகளே! மேலும் அவன்
இறைமையினை, அவ்வினை ஆழமையாக உணர்ந்து, அவனே யாம்
ஆகி! யாமே அவனாகி! அவனும் யாமும் இணைந்து, கலந்து,
அதுவாகி! அதுவேயாமாகி அகமே அகமாயி இருப்போம்,
என "தெளிவது" ஞானம் ஆகும்! ஆமா இல்லை?



நான்! என்னுள்! எனது! என்ற நிலையில், அஹங்கார, அதிகார, ஆதிக்க, அபிமான, உடைமை, உரிமையின், மனமடமையால், மானவமானம், வெட்கம் சூடு, சுரணை, லஜ்ஜை இவைகளோடு கூடிய "பிணைவதும்" அஞ்ஞானம் ஆகும்!

மேலே கூறிய நிலையில், நான், என்னுள், எனது அறியாமல், அந்த பாவனையில், "வாக்கோ/செய்கையோ" ஒருவனிடம் இருந்தால், அது "நற்புகழ்ச்சி" யும், நற். பெருமையும் ஆகும் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்! அதே நேரம்?

மேலே கூறிய நிலையில், நான், என்னுள், எனது, முழுமையாக நீங்கி அழிந்து! அந்த அனுபவ நிலையில், எல்லாம் நீயே! உன்னுள்! உனதே! என்ற சர்வார்ப்பணம், ஸ்வய அனுபவ நிலையில், "வாக்கோ/வாழ்வோ/செயலோ"/ வந்தால், பிரமாணமாகச் சொல்கிறேன்! அது நற் பெருமையும் அல்ல! நற் புகழ்ச்சியும் அல்ல! அது செயல்படும். நிலையில், அவனாக இருந்து கொண்டு நடத்தும் ஓர், "அற்புத நிகழ்ச்சி" ஆகும்! என, தன்னில் உணர்ந்த, ஸ்ரீ மஹான்கள் சொல்ல கேள்விப் படுகிறேன்!



(7) ஞானம் என்னும் பயிரை வளர்க்க வேண்டும் :- அந்த ஞானம் விலகிடவே, ஞானமே இருக்கும்! ஞானம் இருந்தாக வேண்டும்! இதுவே நியதி! இதுவே விதி!

இங்கு ஞானம் "இரு" வகைப்படுகிறது.

அதாவது "ஞானம்" என்றுவே, "அறிவு" எனப் பொருள்படும். இந்த அறிவே "ஆத்மா" என்றும் சொல்லவாம்! இந்த அறிவே ஸ்ரீ பகவான் என்றும் சொல்லவாம்!

ஆனால் இங்கு அறிவே ஆத்மா என்றும், அறிவே பகவான் என்றும், சொல்லக் காரணம் என்னவென்றால்?

"பத" முக்தியின் நிமித்தம் "ஸ்ரீபகவான்" என்றும்;

"பர" முக்தியின் நிமித்தம் "பரசொரூபம்"!

என்றும், ஸ்ரீ மஹான் கூறல், சொல்லப்படுவதால்; முந்தையது, "சொல்" விளக்கத்தின் ஆன்மா! என்றும்;

பிந்தையது காலம், தேசம், வர்த்தமானம், மனம், வாக்கு, காயம், குணம், நாமரூபம் குறி, முதலிய, சொல்லாலும், வரியாலும், "விளக்க" வொண்ணா ஆன்மா! என்றும்,

ஸ்ரீ மஹான்களால், அனுபவ ரீதியில், சொல்லப்படுகிறது.

அதாவது { தற்காலிக பேரானந்தம், அடையும் நிலை என்றும்; நிரந்தரமாய்! சாஸ்வதமாய்! ஒளியாயும் பரமானந்தம், அடையும் நிலை என்றும்; } சொல்லவாம்.



உ

(12)

இதை ஸ்ரீ மஹான்கள்?

"சாயுஜ்ய" முக்தி என்றும், "கைவல்ய" முக்தி என்றும், இரண்டாக பிரிக்கிறார்கள், ஸ்ரீ மஹான்கள்!

முதலாவது பத முக்தியாகும்! இரண்டாவது ஜீவன் முக்தி ஆகும்!

முதலாவது ஆன்மாவை பெயரளவில், அறிந்த நிலையாகும்!

இரண்டாவது, ஆன்மாவே "நாம் ஆன" நிலையாகும்!!

ஆகவே இங்கு, ஸ்ரீ பகவத் கீதையில், ஸ்ரீ பகவான் சொல்வது ஞானம் என்னும் பயிரை வளர்க்க வேண்டுமென்றால்?

ஸ்ரீ பகவான் வேறு! மாயா வேறு! என்பதே ஸத்தியம்!

(A) ஸ்ரீ பகவான்! மோஹம்! முக்குணம்! மும்மலம்! மூவாசை! ஆகிய இந்த பன்னிரண்டையும், நிலை கண்டு, பக்குவம் உணர்ந்து "நாம்" ஒதுக்கொள்ளவே, ஸ்ரீ பகவானாக இருக்கிறான்!

(B) மாயாவானது, தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு! இவைகளை, அடிப்படையாக கொண்டு "உண்டாகுவதே" தஹ "மயக்கம்" உண்டுபண்ண இல்லவே இல்லை!

(C) மாயா மனமானது, மேலே சொல்லியவைகளில், ஓர் மயக்கத்தை, உண்டு பண்ணிக் கொண்டு அம்மயக்கத்தினால், புண்ணிய பாபம் என்ற, சேர்க்கையினால், ஜனன மரண விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறது!!



உ

இம்மனதை நம் பிறவி, சந்தேகம் களங்கம், கலக்க பயம், வந்தே தீரும்!
ஸ்ரீ பகவானின் நம் பிறவி, இவை அனைத்தும் "வேரூடு அழிந்து" போகும்!
பரசொருப அம்ச, ஸத்குருவை நம் பிறவி, "மாயா"வும் வேலை செய்யாது! "மன"மும் வேலை செய்யாது!
அங்கு, ஜீவன் முக்தனாகவே இருப்போம்!
இது ஸ்ரீ மஹான்களின் ஸத்திய வாக்காகும்!

ஸ்ரீ பகவான் வாக்கியம்: — "மாயையற்ற" "மனமற்ற" பயிரை வளர்க்க வேண்டும் என்று!

மாயையற்ற! மனமற்ற! பயிரை வளர்க்கும் "ஒரே" மார்க்கம் பரிபூரண சரணாகதியாகிய "சமர்ப்பணம்"
ஒன்றே ஸத்தியம்! வேறு எந்த மார்க்கமும், அனுபவம் (பவன்) ஆகாது! மற்றும் அனைத்தும் "வீண்" ஞானமாகவே முடியும்!

(8) ஸ்வய ஞான அனுபவத்திலே, சாயுச்சியம் என்னும், பவின அனுபவித்து, (இதுவரை ஒட்டிய மணியாம்) பின் அப்பதரை நீக்கி, மணியை மட்டும், ஒதுக்கி கொண்டு, அதாவது மணி என்ற கைவல்யத்தை! அதாவது ஜீவன் முக்தியை அடைந்து நாம் நாமாய், இருக்க வேண்டும்!



உ



பரமுக்திக்கு, சாலோக / சாமீப / சாரூப / சாயுஜ்யம் / என நான்கு பதத்தை, ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள். இந்த நான்குமே, "பரமபதம்" எனச் சொல்லும், "வைகுண்டம்" என்று, ஸ்ரீபகவானை அடைய, சமீபமாக "நெருங்கி" அவனுடைய, "சௌபாக்ய" தரிசனம் ஸ்பரிசனம் கிடைக்கும் நிலையாகும்! இந்த நான்குமே, ஸ்ரீபக்தர்களுடைய தாரதம்யம் கண்டு (புண்ணிய சிரேஷ்டம் கண்டு) "பதவி" பெறும் நிலையாகும்! இங்கு இப்பதவி தாரதம்யம் முழுந்ததும் இருப்பவும், சேர்த்து வைப்பது போன்று, அப்புண்ணியம் தேட, இருப்பவும் இப்புவகம், வந்தே ஆக வேண்டும். இதுவோ தாரந்திர பிராப்தியாக இருப்பதனையும்,

" மேலும் பிறவி எடுக்க வேண்டியதாக, "

" ஸ்ரீபகவானுடன் கலக்க முடியாமல் "

" அறிவு பேரறிவாக மாறாமல், "

" தர்சன ஸ்பரிசனமயக்கம் மட்டும் "

" ஜனனமரண பயம் விலகாமல், "

இது "பதரோடு கூடிய மணியாக" இருக்கிறதென்று ஜீவன் முக்தியின் அனுபவ ஞானியர் கூறுவர்.



உ

15

“அம்” திரை” நீக்கும் நிலையாவது?

முன்கூறிய, நான்கு பக்தநிலைகளுமே,
ஸ்ரீபகவானை, மூடியிருக்கும் ஓர் “மாயா”
திரையாகும் என, ஸ்ரீமஹான்கள் கூறுவர்!
ஸ்ரீபகவானுக்கும், ஓர் திரை உண்டா? என கேள்வி எழுவாம்?
அவசியம் இவ்விடம். ஆனாலும்?

“ஜீவநிலையில் மனத்திரை” என்றும்;
“ஈச” ” “அறிவுத்திரை” என்றும்;
ஸ்ரீமஹான்கள் கூறுவர்.
அறிவு எப்படி திரையாக முடியும்? அறிவே ஆன்மா
என்றும் போது, அதை திரையென எப்படி சொல்வது?
இதை கவனிக்கவும்!

“தற்பதம்” என்றால், ஈசன்நிலையாகிய ஸ்ரீபகவான்
(பரமாத்மநிலை) ஆகும்!
“தற்போதம்” என்றால், ஸ்ரீபகவான் நிலையைச்,
சுட்டிக்காட்டி, (பாடநிலையில்) அனுபவம், கொடுக்கும் நிலையாகும்!
ஆகவேதான் தற்போத ஒளியறிவு “விகல்பம்”
தீர்ந்து, தற்பதமே “தானாக” மக்கறைவாய்!
என்றோர் எம்பிரபு! தற்போத அனுபவம், பெறுவதற்கு,
விகல்பமாகிய குற்ற உணர்வுகளை, களைந்தால் தற்பத (ஸ்ரீபகவானின்)
சொரூபத்தில், நிலைபெறலாம் என, ஸ்ரீமஹான்கள் சொல்வர்!



உ



தற்பத சொரூபமாகிய, ஸ்ரீ பகவான் நிலை, "அறிவாய்" கூடப்பட்டிருக்கிறது.
ஆகவே யாம், ஸ்ரீ பகவானாக இருக்கிறோம் என்ற, ஓர் உணர்வு உண்டு!
வெங்காய தோல் போன்று, இந்த தற்பத சொரூபத்தையும் தள்ளினால், "யாம் அதுவாகவே" இருக்கிறோம் என்ற, "பேரறிவு" சொரூபமாகிய, அகண்டமானவன், சத்தியமாகும்!
இது சர்வ சாட்சிநிலையாகும்!
இந்த பேரறிவையும் தள்ளினால் "ஏதுவோ", "அதுவே நாம்" எனப் பொருள் கொள்ள வேண்டும்!
அதை வாக்கோ, வரியோ, சொல்லவோ, விளக்கவோ, முடியாத ஒன்றாகும்!
ஆகவேதான், அறிவும் ஓர் திரையே என்றும்,
" பேரறிவும் " " "
ஸ்ரீ அனுபவஸ்தர்கள் சொல்வர். ஆகவேதான், காலாதீத அந்த "ஒன்றுமணி" என்றும், மற்றும் அசித்தும் "பதர்" (உமி) என்றும், ஸ்ரீ மகான்கள் சொல்வர்! ஆகவே, பரசுக்கியம், அதைச் சார்ந்த ஸ்ரீ பகவானும்! உமி என்றே தள்ள வேண்டும்.
இதில் ஓர், முக்கியமான ரகசியம் மறைந்திருக்கிறது!



(17)

உ

"உலக" நிலையில், உமி இல்லாமல் மணி இல்லை என்றும், உமியே மணியின் பாதுகாப்பு என்றும் "பொருள் படும்!

ஆனால் இங்கு "பரமார்த்தத்தில் "மணியே" ஸத்தியம்! ஸாஸ்வதம்! என்றும், அம்மணியே, தன்னைக் காட்டிக் கொள்ளாமலும், ,, ,, காட்டிக்கொடுக்காமலும், தமக்காகத்தானே ஓர் திரையிட்டு மூடிக் கொண்டது! (இது சொல் விளக்கமே கயிறு உண்மைக்கு இல்லவே இல்லை) அது ஓர் (தம்முடைய) நிழல் ஆகும் என்றும், அதையே உமி என்ற பதர் என்றும், ஸ்ரீ மஹான்கள் கூறுவர்!

ஆகவே இங்கு, லௌகீக உமி என்ற பதரை நீக்க, "மனதை" அழிக்க வேண்டும் என்றும், தெய்வீக உமி என்ற பதரை நீக்க, "மாயையை" நீக்க வேண்டும் என்றும்,

(ஸ்ரீ பகவானே தான் ஆகவேண்டும் என்றும், பின் பகவானையும் தாண்டவேண்டும் என்றும்;)

இவ்விரண்டும் நீங்கினாலன்றி "மணி" என்ற, அது ஆக முடியாது! என்றும், அது ஆனாலன்றி, பிறவா நிலையாகிய, ஜீவன் முக்தி பெற முடியாது என்றும், கூறிய ஸ்ரீ மஹான்கள், ஸ்ரீமத் பகவத் கீதையின் இந்த வாக்கியமானது, "அத்வைத" சிறப்பையே கூறுகிறதென்றும், தம் ஸ்வய அனுபவ நிலையில் சொல்வர்!



II உ (18)

ஸ்ரீமத் பகவத் கீதையின் மற்றோர் வாக்கியத்தையும், அவன் உரைத்த கேண்மின்!

"(1) யாம்" இந்த ஜீவர்களுக்கு எந்த "கர்மாவும்" கொடுக்கவில்லை!

(2) இயற்கையே (பிரகிருதியே) அதாவது மாயாவே, "தம் காரியத்தை" தாமே, இயல்பாக திட்டமிட்டபடி, திட்டமிட்ட காரியங்களை ஒழுங்காக செய்து முடிக்கிறது. அவை தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு, ஆகும்!

"ஆனால்?

(3) மனம் வசம்" அகப்பட்ட இந்த "மனிதன்" மட்டும், "நான், நான்" என்றும், என்றல்லாது என அஹங்காரத்தையும் அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும், கொண்ட "கர்த்தத்துவத்தை" ஏற்படுத்திக் கொண்டு, இயற்கையின் பொருளையும் இயக்கத்தையும், எனது எனது உடைமை, உரிமை, கொண்டாடி, அந்த அபிமானத்தால், கோரகுணங்களுக்கு ஆளாகி, "எண்ணம்" தொடவும் முடியாதவனாய். உவகை விடவும் முடியாதவனாய். பெரிய தவளையை, விழுங்க முயலும், இரிய சர்ப்பத்தைப் போல் விழுங்கவும் முடியாமல், கக்கவும் முடியாமல், கஷ்டமும், மனஉளைச்சலும் உடையவனாய் இருக்கிறான்! என சொல்லி முடிக்கிறான் கண்ணன்!





உ

இனி இதன் விளக்கம்!

(1) யாமே இந்த ஜீவர்களுக்கு, எந்த கர்மாவும், கொடுக்கவில்லை!

ஸ்ரீபகவான் வாக்கியம் :- அறியாமையின் உள்ளே உள்ள "ஜீவ" ஆத்மாவும்!

யாமே! அறிவு சொரூபமான "பரம்" பரமாத்மாவும்! ஆத்மாவும்!

யாமே! பேரறிவு சொரூபமான "பரம்" பொருளும்!

யாமே! பரமான யாமே, பரமாத்மாவானோம்! பரமாத்மாவான யாமே, ஜீவாத்மா என ஆனோம்! ஜீவாத்மாவான யாம் விளையாடவும் நிமித்தமாகவே, நாமரூப ஜகத்தை, எம்மாயாவால் உண்டு பண்ணினோம். எம்மாயாவில் தோன்றிய, மாயா மனதை, வைத்தே விளையாடினோம்! விளையாடிக் கொண்டும் இருக்கிறோம்!

மனம் :- கலிதோஷ விகார தோஷ குணங்கள், அனைத்தும் கொண்டதாகும்.

அறிவு :- பொறுமை, கருணை, அன்பு, சாந்தி, அஹிம்சை, அமைதி, ஆனந்தம், இவைகளை கொண்டதாகும்!

மனம் = "காட்சி" நிலை! அறிவு "சாட்சி" நிலை!

காட்சி என்றாலே, எல்லா கோர குணங்களும், சார்ந்து இருக்க வேண்டும்.
சாட்சி என்றாலே, மேலே சொன்ன, சத்குணங்கள் ஒன்றே உள்ளது!



உ

(20)

காட்சி சொரூபனை "ஜீவனும்" யாமே!
சாட்சி சொரூபமான, ஸ்ரீ பகவானும் யாமே!

இவ்வுலக ஜீவ விளையாட்டில், முன்னேற்பாடாக, போட்டு விட்ட காரியங்கள், இந்த உலகமாகிய, நாடக மேடையில், ஒழுங்காக நடைபெறுகிறது.
மனம் பற்றிய தன்மையினால் யாமே ஜீவன் ஆனேம்.

மேலே கூறிய நிலையில், நடைபெறும் காரியங்களை, நான், என்னால், என்னுடையது என "கர்த்தத்துவத்தோடு" விளையாடும் ஜீவர்களுக்கு மட்டும் நான் என்றும், எனது என்றும், சொந்தம் கொண்டாடிய தன்மையினால், அவர்களுக்கு மட்டும், இன்ப துன்பங்களினால், காமக்குரோத, லோப, மோஹ, மத, மாச்சரியங்களால் (ஆறு குணங்களாலும்) அதைச்சார்ந்த, பல பல "விகார" குணங்களும் இணைந்து, சஞ்சலம், சங்கடம், துக்கம், பயம் இவைகளால், நான் கெட்டுப் போனேன் என்றும், நான் இன்பம் அனுபவிக்கிறேன் என்றும் பிதற்றுகின்றனர். நான், என்னால், என்னுடையதை, விட்டவர்கள் மட்டுமே பேரானந்தம் அனுபவித்து, பின் "பிரம்மானந்தத்திற்கு" அதிகாரி ஆகிறார்கள்.



உ

(21)

ஜீவர்களுக்கென்று, எந்த "கர்மாவும்"
இல்லவே இல்லை!
மாயாமனம், அனைத்தையும் "தனதாக"
பாவனை செய்வதால், கர்மா தோன்றுகிறது!

அஹங்கார, அதிகார, ஆதிக்க, உடைமை, உரிமை
இவைகளை, விட்ட மறுக்ஷணம் "கர்மா" நம்முடையதல்ல
என்பதும்;
இது ஸ்ரீபகவானுடைய, மாயாவுக்கும், அவித்தையான
உடல் உலகுக்கும் நடக்கும் ஓர் "போராட்டம்"
என்பதும்
நாம், "ஆனந்த" சொரூபமே, என தெளிவாகும்.

௨ இயற்கையாகிய, பிரகிருதியே, அதாவது,
மாயாவே, தம் காரியத்தை தானே, இயல்பாக,
திட்டமிட்டபடி, திட்டமிட்ட, காரியங்களை,
ஒழுங்காக செய்து முடிக்கிறது! அவற்றின் செயல்பாடு!
தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு, ஆகிய இந்த
நான்கும் ஆகும்!

விளக்கம்:— "அவித்தை" யாகிய, உடல் உலக பொரு
ட்களை, "மாயா" உண்டுபண்ணி; தன் மகளாகிய,
"மனதை" வைத்து, விளையாடிக் கொண்டிருக்கிறது,
என்பதே ஸத்தியம் என, ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேள்வி!
இங்கு அவித்தையாகிய, ஒன்றை மாயா, ஓர் வடிவம் கொடுக்க



உ

௨௨

அதை ↑ "தேவைக்" "ஆசை"!

ஆசைக்கு தேவை! என மாறி மாறி மனமானது நம் எண்ண விருத்தியால், இயற்கையின் உருவத்தை, செயற்கையாக்கியது இந்த "மாயா மனமாகும்"! இது நாமரூப ஜக விருத்தி ஆகும்! அதே நாமரூப ஜகத்தை அஹங்கார, அதிகார அபிமானத்தால் "தனது" என, சொந்தம் கொண்டாடியதால், வினைப் பெருக்கம் ஆனது!

எல்லாம் ஸ்ரீ பகவானுடையதே! எல்லாம் ஸ்ரீ பகவான் செயலே!

என நாம், அடங்கி அம்மா இருந்தால், உலகம் உலகமாகவே முடியும்! தோஷமாக முடியாது! வினையும் பெருகாது!

நடப்பதை, நலமாக ஏற்றுக் கொண்டால் நிவர்த்தியே!

நடப்பதில், எதிர்பார்ப்பு இருந்தால், அது பிரவர்த்தியே!

அது "ஏமாற்றமுங்காமாயும்" உண்டாகும்!

(3) மனம் வசம், அகப்பட்ட இந்த மனிதர்கள் மடமை, நான்! நான்! நான்! எனது! எனது! எனது! என்ற கர்த்தத்துவத்தை ஏற்படுத்திக் கொண்டு, இயற்கையின் பொருளையும், அதன் இயக்கத்தையும், எனது என்ற உடைமையும், உரிமையும், கொண்டாடி, அந்த அபிமானத்தால், கோர தோஷத்துக்கு ஆளாகி, எம்மை தொடவும் முடியாமல், நாமரூப, உலகை விடவும் முடியாமல், பொறியில் அவதியுறுகின்றான்!



உ

௨௩

விளக்கம்:— ஸ்ரீபகவானுடைய கருத்து!

குழந்தே! இவ்வுலகமும், அதன் பொருள்களும், எம்முடையதே! அனைத்து இயக்கமும்! எம்முடையதே! நீ அணிந்திருக்கும், "தூல உடலும்" எம்முடையதே! அதை "ஏன்

உன் இருக்கும் சைதன்யமும் யானும் ஒன்றே!
அது நேர்நக்கியால் நீ எம் குழந்தையே!

"என்னுடையது" என பாவனை பண்ணுகிறாய்?

உன் அம்மா, அப்பா, உன் மனைவி, குழந்தைகள், உன் படிப்பு, பணம், தொழில், அதன் அனைத்து இயக்கங்கள், எல்லாம் "எம்முடையதே!"

அதை ஏன், உன்னுடையதாக, பாவனை செய்ய வேண்டும்? நான் நான்! எனது எனது! என்னால் என்னால்! என பாவனை பண்ணி பண்ணி, எத்தனை துன்பங்களையும், துயரங்களையும், கஷ்டங்களையும், கவலைகளையும், ஏன் "வீணே" "சுமந்து" அல்லல்படுகிறாய்? உன் அம்மையப்பனை இருந்து கொண்டு உன் மனதே "பாரங்கள்" எல்லாம், யாம் "சுமக்க" தயாராக இருக்கும் போது, எம்மிடம் விட்டுவிட்டு நீ ஆனந்தமாக விளையாடலாமே! உன் "நிழல்" போல், உன்னுடனே, எந்த வினாடியும், தொடர்ந்தே வருகிறேன்! தெய்வம் மனுஷ்யாணாம்! தெய்வம் தோன்றாத் துணைவன்! எம்மை சிறிதளவேனும் "நோக்க" மறந்து விடுகிறாயே! பொருள் மோகமும்!



(24)

ஓ

பண மோகமும்! பெண் மோகமும்!
தொழில் மோகமும்! மனைவி பிள்ளைகள்
மோகமும்! இது கிடைக்கவில்லையே! இது
நடக்கவில்லையே என்ற, வேகமும்! இப்படி
உன்னடியதால், முட்டி முட்டி, மோதி மோதி, உன்
மண்டை உடைந்து, நீ அவதியுறுவதை, எப்போதும்
"உன்னுடன் உள்ளாயாம்" (உடனும், உள்ளும்)
காண்கின்றேம்! அறிகின்றேம்! உணர்கின்றேம்
"நீ" தொடுத்தால் தானே யாம் வாங்க
முடியும்? "நீ" அழைத்தால் தானே யாம் வர முடியும்??
உன் சொந்த, பந்த பாச பிணைப்பு, "எண்ணம்"யும்
"உணர்"வோட்டமல் அப்படி மறைக்கிறது போலும்?
உடல் உலக, பொருள்கள் அனைத்தும், உன் "உடல்"
புண்ணிய பாவத்திற்கேற்ப → "வரும்போதும்"
மாறும். மறையும்!
அதன் மேல் தான் உனக்கு ஏத்தனை → மோகம்?
எம் நாமாவை சொன்னால், வினைப்பயன் பாரம் குறையுமே?
நான் என்றால் எனது என, நீயே அப்பாரத்தை, உன்தலையில் வலிய தூக்கி, வைத்துக் கொண்டு ஏன் கஷ்டப்பட வேண்டும்?
உன் உடல், வினையின்படி, கொடுக்கும், எடுக்கும், எம் மாயா, அம்மணியை ஒழுங்காகச் செய்கிறது! அதை நீ உணரவில்லை?



உ

(25)

"யாம்" யாருக்காக இருக்கிறோம்?

"யாம்" உனக்காகவே இருக்கிறோம்!

"நீ" இல்லாமல் யாம், இருந்தும் இல்லாதவனே!

"நீ" எம் குழந்தை, என்பதையே மறந்து விட்டாயே! ஏன் அப்படி, கூறுகிறோம் என்றால், உன்னிடம் "மனம்" இருக்கிறது! எம்மிடம் மனம் இல்லை, நீ எம்மை நினைப்பதை எம் அறிவால் "உணர" முடியும்! அப்படி உணரும் நிலையில், இயற்கையாகவே, ஆவன நடைபெறும். அதாவது உன் மனம், சாந்தியாகும்! அப்படி சாந்தியான மனம், "ஸத்தில்" தாமே நிலைபெறும்! அங்கு உன் "ஸத்குரு" கிருபையால், ஜீவன் முக்தி பெறலாமே?

III ஸ்ரீபகவானுடைய ஸ்ரீபகவத் கீதையின், மற்றோர் வாக்கியம்.

இமைகளை திறந்தாலும், மூடினாலும். நின்றாலும், நடந்தாலும், இருந்தாலும். உண்டாலும், உறங்கினாலும். கொடுத்தாலும், வாங்கினாலும். புலம்பினாலும், படித்தாலும். மற்றும் "எந்த" காரியத்திலும்! இவை "கருவி கரணங்கள்" அதனதன், வேலையை, ஒழுங்காக செய்கின்றன. என்று



உ

கருதுகிறான் உண்மை "சந்நியாசி"

இதன் பொருள்:— ஒவ்வொரு "மனம்" படைத்த ஜீவனும் "முனிவனும்"

அவரவர் சேர்த்த, புண்ணிய பாபத்திற்கேற்ப, "பற்றுவரவு" என்ற, கொடுக்கல் வாங்கல், கீதாச்சாரப்படி, பாரபட்சமின்றி தோஷமில்லாமல், "திட்டமிட்ட" காரியங்கள் அனைத்தும், "திட்டமிட்டபடி" ஒழுங்காக நடைபெறுகிறது என்பது, சத்தியமாக இருப்பதால், "பக்குவ ஆன்மா" மனம் பதறுவதும் இல்லை, மனம் சிதறுவதும் இல்லை, மனம் தடுமாறுவதும் இல்லை, அங்கு சந்தேகம், கவலை, பயம் இல்லவே இல்லை.

உண்மை சந்நியாசி, முதலில் சொல்லிய நிலையில், கருவி கரணங்களோ, நியதிப்படியே தானாக, செய்கின்றன என, அடங்கி இருந்து கொண்டு, அமைதியாக இருக்கிறான். சந்நியாசி போல் "வேஷமிட்டவன்" மனச் சஞ்சலம் அடைந்து, வினைகளைப் பெருக்கிக் கொள்கிறான்.



(27)

உ

உண்மை சந்நியாசி தன்மனதை,
"அரஸிஸ்" ஒடுக்கி அர்ப்பணித்த தன்மையால் "மனம்"
செயல்பட முடியவில்லை! அதாவது ஓர்
ஸ்ரீபகவானிடம், முன் கூறியபடியில், சர்வார்ப்பணம்
செய்த தன்மையால், அம்மா சுகமாக இருக்கிறேன்!
சந்நியாசி "போஸ்" உள்ளவன், அஹங்கார
அதிகார, ஆதிக்க, "வைரஸால்" உந்தப்
பட்டு, போட்டி & பொறாமையால்! பணம், பட்டம்,
பதவி, புகழ், கீர்த்தி, இவைகளின் "பிரவாந்து" யில்,
மாட்டிக்கொண்டு, அவதியுறுகிறான்!

இதன் உண்மை என்னவென்றால்?

நாம ரூப, ஜகமானது, வெறும் ஜடமே!
"மாயா" அவைகள், இயற்கையின் நியதியில், அப்படியே,
பாது காத்து வந்தது!
அவைகளில், மோஹம் கொண்ட மனமானது, தேவை ஆசைகளை
பெருக்கிக் கொண்டு, உடைமையும் உரிமையும், கொண்டாடியது
ஆகவே இங்கு, அவஸ்தைப்படுவது மனமே தவிர,
"ஆத்மா" அல்ல என்பதே சத்தியம்!

ஆனாலும் ஓர் முக்கியம் என்னவென்றால்?



உ

சாதனையில் "பண்படாதவனும்"
குடும்பியான ஓர் "பாமரனும்"
ஓர்பண்டிதனும், மனம் வசம், அகப்பட்ட தன்மையினால்,
திட்டமிட்ட காரியங்கள், இயல்பாக நடந்தாலும்
அஹங்காரம் அபிமானம், அறியாமல், இருப்பதனாலும்.
ஓர் காரியம் "வினையும், விதியும்!"
முடிந்தாலும், முடிக்காதாலும்; இவன் "மனம்"
அக்காரியத்தை, எண்ணவும், அது முடியவும்; அதை,
இயல்பாக முடிந்தது என, எண்ணாமல்.
"நான்" எண்ணினேன் "என்னால்" முடிந்தது.
"நான்" இந்த முயற்சி, செய்ய வில்லையானால்,
இது முடியாது! நான் கஷ்டப்பட்டு இதை முடித்தேன்.
"கடவுளா" இதை முடித்தார்! அவர் எங்கே
வந்தார்? நான் எண்ண வில்லையானால். நான் செய்ய
வில்லையானால், இக்காரியம், முடியாது என, மார்
தட்டிக் கொள்கிறான்! தெய்வம், மனுஷ்யனாகும்!
என்பதையும், தெய்வம் தோன்றாத துணைவன்! என்பதை
யும். தெய்வம் அந்தர்யாமி! என்பதையும். இவையை
அஹங்கார, அதிகார, அபிமானம், மறைத்துக்கொண்டு,
என்பதே சத்தியம்! இதுவேயே கர்மா பெருக்குகிறது!!



உ

இதனாலேயே கர்மா வலுவடைகிறது!
உன் கர்மா சம்பந்தப்படி, அவ்வினையை,
முடிக்க **ஸ்ரீபகவான்** ஓர்
மனித வடிவத்தில், வரும்சமயம் (அவஸ்யம்
ஸ்ரீபகவான் வந்தே தீருவான்! வந்தே ஆகவேண்டும்.)
அவன் (அச்ஜீவனுள் இருப்பதை)
"**உள்இருப்பை**" உணராமல்,
வெளித்தோற்றத்தை (நாம ரூபத்தை) மட்டும் கண்டு
கொண்டு அண்ணா தம்பி! அக்கா தங்கை! மாமன் மைத்துனன்!
அம்மா அப்பா! கணவன் மனைவி! தாத்தா பாட்டி! என்று,
"**உறவு, சுற்றம், நட்பாக**"!
கண்டு, அனுபவிக்கிறோமே தவிர, அதனுள் ஸ்ரீபகவான்
இருக்கிறான் என்றும், ஸ்ரீபகவானின் இயக்கமே என்றும்,
**எல்லாம்** அவனே என்ற உறுதி நிச்சயம்
வரமறுக்கிறது! காரணம், நாமரூபமயக்க மூடம்,
பழக்க வழக்க, கோஷ்டி முனைப்பும் ஆகும்! இதன்
உண்மையான, காரணம் என்னவென்றால்?
அஹங்கார, அதிகார, ஆதிக்க வெறியும், உடைமை
உரிமை, இவைகளினால், எனது என்று, சொந்தம்
கொண்டாடியதும், மானவமானம், வெட்கம்,
சூடு, சுரணை, லஜ்ஜை முதலிய "**அபிமானமும்**" ஆகும். இவைகளை, விட்டொழித்தால் போதும்.
அனுபவம் பிரத்தியட்சமாகும். இது இந்த ஏழையின்
அனுபவம் ஆகும்.



உ

(30)

பொதுவாகவே, கண்ணன் சொல்லும் வாசகத்தில், "சந்நியாசி" என்றும் "துறவி" எனும் பொருள்படும்! துறவி என்றால், நாமரூப ஜகஜீவ பொருள்கள், அனைத்தையும் மித்தையென (பொய்) என தள்ளியவனே சந்நியாசி! நாமரூப ஜகஜீவ, பொருள்கள் அனைத்துமே "பிரமாந் தியிருவையே" மெய்யானது! நரை திரைகள் அவை, பொய்யாகும்! ஆகவே இங்கு, "மக்கள் சேவையே, மகேசன் சேவை"! என, சந்நியாசிகள் அனைவரும், சேவை செய்ய விழைவது! "வேஷ" மாயிருக்கிறது. அங்கு அவர்கள் நான் என்றும், என்னுடையது, விடாத் தன்மையாலும் அவர்கள் சேவையானது, எதிர்பார்ப்பு என்ற நிலையில், வியாபாரமாக இருப்பதாலும், பேரும் புகழும் வேண்டிய நிலையில், விளம்பரமாக இருப்பதாலும், அவை சேவை ஆகாமல், வேலையாக மாறிவிடுகிறது! ஆகவே இங்கு, கூறும் மக்கள் சேவையே, மகேசன் சேவை எனக் கூறுவது, "கலிதோஷ" வாசகமாகும்! ஆதலால் ஸ்ரீ மகான்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்? தாயுமானவர் பாடலில், கூறியபடி :- அன்பர் பணிக்கு எம்மை ஆளாக்கி விட்டு விட்டால், இன்பநிலை அதாவது பேரானந்த நிலை



உ

நாமே வந்து எய்துவம் பராபரமே.

இதன் "உண்மை" என்றோ பொருள் என்னவென்றால்?

"இறை" (ஸ்ரீபகவான்) உணர்வுடன்,

தொடுவதும்! கொடுப்பதும்!! வாங்குவதும்!! இருந்தால்,

அது "தர்மமாக" மாறும்! "சேவை"யாக முடியும்.

அதே, வந்தகர்மாமட்டும் தொலையும்! சொந்த எந்த கர்மாவும்

தொடராது! அதனால் "ஜீவன்முக்தி" அவசியம் பெறலாம்.

IV ஸ்ரீபகவானுடைய, ஸ்ரீமத்பகவத் கீதையின், மந்த்ரோர்வாக்கியம்!

தூலபூத தொகுதிகளான, சரீரங்களை விட,

சூட்சுமமான, இந்திரியங்கள் (ஞானேந்திரியம்) பலபல!

அப்பல இந்திரியங்களிலும் மனம் சூட்சுமம்!!

"ஸங்கல்ப விகல்பங்களுக்கு" ஏதுவாகிய மனதைவிட, தீக்ஷண்ய புத்தியே சூட்சுமம்.

அப்புத்திக்கு, விகாரியும், கர்த்தாவாகியும், இருப்பவரே, "தேகி" என்ற ஆத்மாவதே!

தேகி:— ஆத்மாவானது தேகத்தினுள் அடைபட்டு இருப்பதைப் போல் தோற்றுவதால் தேகி ஆத்மா என்று கூறப்படுகிறது.

ஆனால் ஆத்மா பந்தப்படாதது. அவ்வாத்மாவே, த்வம்பத வாச்யார்த்த, கூடஸ்தப்ரம்மம்! என்றும், தத்பத வாச்யார்த்த, பரமாத்மா! என்றும், அஸிபத சொரூப பரம்பொருள் என்றும், அதுநமக்கு அன்னியமில்லை என்றும், நாம் அதற்கு அன்னியமில்லை என்றும்.





உ

"கண்ணா" அறிந்த ஸ்ரீ மஹான்கள் சொல்வர். இதன் உட்கருத்து! ஸ்ரீ பகவன் நாமா பசுபதீஸ்வரன்.

"பசு, பதி, ஈசன்" ஆகும்.

இனி இதன் பொருள்:— இது ஓர் உதாரணமே/ உண்மையல்ல.

"பசு" = "ஜீவன்" / பதி = பரமாத்மா

"ஈசன்" = இங்கு இந்த ஒரு இடத்தில் மட்டும் பரம் பொருள் எனக் கொள்க. "பரம்பொருள்" / உண்மையல்ல. சொல் விளக்கத்திற்காக இவ்வாறு குறிப்பிடுகிறேன்.

பரம் பொருளாக இருக்கும் "ஈசன்" நாம ரூப ஜக நிமித்தம் "பதி" என்ற ஸ்ரீ பகவான் என ஆனார்.

அந்த பதி என்ற ஸ்ரீ பகவானானவர், வியாபாரம் நிமித்தம் "மனதை" வைத்துக் கொண்டு, சொந்த பந்தத்தால் பாசம் என்ற "பற்றின்" நிலையில், பசு என்ற ஜீவன் என ஆனார். இதே பசு என்ற ஜீவனை ஸ்ரீ பகவான் என்ற, பதியானவர். பாசம் என்ற பற்றை விட்ட நிலையில், ஸ்ரீ பகவானாகிய, பதி ஆகி விட்டார்! அதே ஸ்ரீ பகவான் என்ற பதியானவர் மாயாவை விட்ட நிலையில் ஈசன் என்ற பரம் பொருளாகி விட்டார்.



உ

ஈசன் (பரம்பொருள்) பதி (ஸ்ரீபகவான்)
ஆனதும், அதேபதி, பசு (ஜீவன் என)
ஆனதும் எப்படி என்றால்?

(1) ஸ்தாவர ஆகத் தோற்றங்களான சரீரங்களை
விசூட்சுமமான இந்திரியங்களையும் (ஞானேந்திரியம்)
பொருள்
ஈசன் என்ற பரம்பொருளானது, விளையாடும் நிமித்தமாக
அந்த நிலையில் "நான்" ஆடவும்! ஆட்டவும்! இயலாத்
தன்மையினால், தானே ஸ்ரீபகவான் என்ற "பதி" ஆனார்!

தம் விளையாட்டின் நிமித்தம், தம் "மாயையினால்"
பஞ்சபூதங்களை (ஆகாயம், காற்று, அக்கினி, ஜலம், மண்)
உண்டுபண்ணினார்! இப்பஞ்சபூதங்களினால், "ஜீவ"
சரீரங்களையும், அவை அனுபவிக்காத, மரம், செடி,
கொடி, புல், பூண்டு, என தாவர வர்க்கங்களையும், உண்டு
பண்ணினார்! அறிவு "மனித" இனத்தை மட்டுமே, நாம்
(2) அசூட்சும இந்திரியங்களிலும்
விசேஷமாக ஒன்றைக் கொண்டு அம்மனித சரீரத்திலும், தாம்
அசூட்சுமமான "ஞானேந்திரியம்" என ஐந்தை
உண்டு பண்ணி, விளையாட்டை ஆரம்பித்தார். அந்த ஞானேந்
திரியங்களிலும் அதிசூட்சுமமாக "மனதை" புகுத்தி
(3) அப்பல இந்திரியங்களிலும்
விளையாட்டுக் காரசாரமாக இருக்கவே பொருட்டு, அம்மனதில்
"குற்றம்" நிறைவான "கற்பனையை" தோற்றுவிக்கச் செய்தார்.
(குற்றம் செய்கை, குறைவான்தை)



உ

ஓம்

(4)

ஸங்கல்ப விகல்பங்களுக்கு,
குற்றம் குறை கற்பனைக்கு சுதிகும்பமமானது,
தீக்ஷண்ய, "புத்தி" ஆமே! :-
"குற்றம்குறை"யால் ஆன "மனதின்" பிணைப்பு,
நாமரூப, ஜக ஜீவ, சொந்தபந்த, பாசப் பற்றினால் வரும்
"புண்ணியபாப" வினைத் தொடர்பின் காரசாரம்
இனி "போகம்" என, நினைவு கொண்டார்!
ஆகவே இங்கு!
ஸங்கல்ப விகல்ப மனதை கெடுப்பதற்காக; அம்மனதை
"சமர்ப்பண" நிலையில், கூர்ந்த "புத்தி"
ஆக்கினார்.
இக்கூர்ந்த புத்தியானது மேலும், மேலும், தீக்ஷண்யம்
ஆனதால், அதுவே "அறிவாகி" விட்டது!

(5) அப்புத்தியே, வித்தாகியும், கர்த்தாவாகியும்.
இருப்பவரே, "தேகி" என்ற ஆத்மா! :- தேகத்தை உடைய
வன் தேகி என்ற ஆத்மா!
தீக்ஷண்யபுத்தியே மேன்மேலும், கூர்மை யானதால், அதுவே
அறிவாக, பிரகாசிக்கிறது என்றால்? நாமரூப, ஜக ஜீவ,
அனைத்தையும், அவன் பொருளாகவும்! அவன் இயக்கமாகவும்!
உண்மையாகவே ஸ்திரமாக ஓரியல்பாய் உணர்ந்த
தன்மையினால், அதுவே "அறிவாகவும்"!



35

அவ்வறிவே "ஆத்மாவாகவும்" அவ்வாத்மாவே அறிவாகவும், அதுவே ஸ்ரீபகவான் என்ற "பதி"யாகவும் தாமே ஆனது.

இப்பதியாகிய ஆத்மாவே "தேகி" என்ற "ஆத்மா"வானது தேகம் என்ற ஓர் சடண்டினுள், "சிறைபட்டு" கிடப்பதால், இதை ஸ்ரீமஹான்கள், "கூடஸ்தபிரம்மம்" என சொல்வர்.

(ஆத்மா அடைபடுவதும் இல்லை, எதையும் அடைவதும் இல்லை, அது அடையப்படுவதும் இல்லை, அடங்கப்படுவதும் இல்லை.)

இது வேத வேதாந்த, சாஸ்திர, விரிவுரைக்காக, சொல்லப் படுவதாகும்.
(இது ஓர் கதையே! உண்மையல்ல.)
(த்வம்)

இக்கூடஸ்தபிரம்மத்தை, த்வம்பத வாச்சியம் என்றும், பகவான் என்ற பரமாத்மாவை தத்பத வாச்சியம் என்றும், பரசொரூபமாகிய, பரத்தை அசிபத வாச்சியம் என்றும், ஸ்ரீமஹான்கள் தம் அனுபவநிலையில், சொல்லிவிட்டு, இம்மூன்றும் இணைந்தாலே "பரப்பிரம்மம்!" என்றும் சொன்னார்கள். இதில் கூறியபடி, பரம்பொருளே, ஸ்ரீபகவானாக வந்து, மாயாவானாயும் மனதாயும் நாமரூபங்களாக ஜீவர்களாகத் தோன்றி, காரசாரமாக விளையாடி விட்டு, விளையாட்டு போலும் என்று நிறைவானதால் அது எப்படி விரிவடைந்ததோ அப்படியே தன்மை தாமே, ஒடுக்கிக் கொண்டு தானாகவே இருக்கிறது என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.



உ

(36)

இதில் ஓர் உண்மை, என்னவென்றால்?
முன்பே பல இடங்களிலும், பல மடல்களிலும்,
மண்ணுக்கு அன்னியம், எதுவும் இல்லை
என்பதே ஸத்தியம்! என கூறியிருந்தோம்.
அம்மண்ணே, தாசியாகவும்! அத்தாசியே,
ஜீவ அணுவாகவும்! அச்ஜீவ அணுவே ஆத்மாவாகவும்!
அவ்வாத்மாவே பரமாத்மாவாகவும்! அப்பரமாத்மாவே,
பரம்பொருளாகவும்! அப்பரம்பொருளே, அக்காலாதீத
"ஒன்றாகவும்" அதுவே நாமாகவும்!
நாமே அதுவாகவும் இருக்கிறோம் என்பதே ஸத்தியம்!
இதன் உண்மை, எப்படி இருக்கிறது என்றால்?
"கண்ணால்" காணும் நாமரூபம் "ஞாலமும்"
முன் கூறிய "ஜீவ அணு"க்களின்
மொத்த பிணைப்பும் இணைப்பும்! ஆகும் என்பதே ஸத்தியம்!
ஆகவேதான் "எல்லாம் பிரம்மமயம்"!
என சொல்ல முடிகிறது! இங்கு ஓர் கேள்வி எழுவாம்!
காலாதீத பர சொரூபமாகிய பிரம்மம்! நாம, ரூப, குணம்,
குறி, காலம், தேசம், வர்த்தமானம், மனம், வாக்கு, காயம்
ஆகிய இந்த "பத்தாலும்" தொட்டுக்காட்டவோ,
சுட்டி உணர்த்தவோ, வாக்காலோ, வரிவடிவிலோ, அதை



௩௭

உ

விளக்க முடியாதென்று, ஸ்ரீமஹான்களின்
அனுபவம் இருக்க, நீங்கள்
"நாமரூப" சம்பந்தத்தோடு,
ஒப்பிட்டு விளக்கம் கொடுக்கிறீர்களே?
இது எவ்வாறு பொருந்தும் என, கேட்கலாம்!
ஓ எம் அறிவு, சொரூபமான குழந்தைகளே!
ஓ எம் ஆத்மானந்த குழந்தைகளே! சிறிது விளக்கம்
தருகிறேன். அறிவு ஊன்றி, அது ஆவீர்களாக!
பொருள்:— முன்பே ஓர் மடலிலும், கொடுத்திருக்கி
றேன்! நேரடி விளக்கத்திலும், சொல்லியிருக்கிறேன்.
47 சதுர் யுகமுமே, வாயு, அக்கினி, ஜலம், பிருத்வி
என்று நான்கிலும்தான் சதுர்யுகமும், சதுர்விதத்தால்தான் "பிராயம்" என்ற
அறிவு உண்டாகும் என்பதும், 48வது சதுர்யுகத்தில்,
தான், "ஆகாயத்தால்" பிராயம், வரும்
என்றும், கூறியிருப்பது நினைவுபடுத்திப் பார்க்கவும்.
47ம் யுகாந்திரப் பிராயம் என்பதும், 48வது பிராயம்,
மற்றும் "மஹாம்" பிராயம் என, ஸ்ரீமஹான்களால்
சொல்லப்படுகிறது. இம்மஹாம் பிராயத்தில், இரண்டு
நிலைகளில், இது முடிவுறும்!

(1) நாமரூப ஜக ஜீவர்கள், மண், மலை, ஜலம், மரம், செடி, கொடி
புல், பூண்டு, (மேலும் இனம் உட்பட) "சர்வமும்"
"ஒரு" நிலையில் அசைவற்று "சிற்ப. சித்திரம்" ஆகிவிடும்!
அசைவோ, ஓசையோ, எந்த சலசலப்பும் இல்லாமல் மௌனம்
பெறும்!

உ

(38)



(நிமிஷமல்ல)

௨ அடுத்த சில "விநாடி" களில், "அனைத்தும்" எந்த சுவடுமே! அதாவது, இவை அனைத்துமே, வந்ததற்கோ! இருந்ததற்கோ! அனைத்தும் மறைந்ததற்கோ! எந்த "சுவடும்" தெரியாமல் அழிந்து விடும்! இருந்தது என "சொல்வாரும்"! அதைக் "கேட்பாரும்"! இருக்க முடியாது! இருக்கக் கூடாது! இருக்க இயலாது! இதுவே சத்தியம்!

இதை முன்பே தெரிவித்திருக்கிறேன்!

இதை இப்போது, ஏன் சொல்கிறேன் என்றால்?

அனைத்து கோள்களாகிய, அண்ட (பிரம்மாண்ட) புவனங்களும்! அங்குள்ள, மண், கல், மலை, ஜலம், மரம், கொடி, செடி, புல் பூண்டு மற்றும் 84 லக்ஷம் ஜீவகோடிகளும், பொதுவாக, அனைத்து உயிரின ஜீவர்களும் மனித இனமும் சேர்ந்த "எல்லா நாமரூபங்களும்!" காலாதீத அந்த ஒன்றான பரசொரூபமான, அதாவது, பரப்பிரம்மமான "ஜீவ அணுக்களின்" அதாவது ஆத்மாக்களின்! அதாவது பரமாத்மாவின்!

39



களிமண்ணும் போல், உஜலமும், சேர்ந்தது ஓர் உருவமானது.

இணைப்பாரும் பிணைப்பாரும்! திரண்டு உருண்ட ஓர் பொருளென்றுமட்டும் உணர்வீர்!

இப்பரசொருபம், இப்படி தோன்றுவதற்கு ; ஆதாரமாயும்! ஆதரவாயும்! அமைந்தது, யோக மாயாவின் மூஅம்சமான ஆகாயம் ஆமென்று ஸ்ரீமஹான் சொல்லக் கேள்விப் படுகிறோம்!

அழித்து தோற்றமும் மறைந்தபின் அகண்டானந்த ஜோதியாய் அந்த ஒன்றே இருக்கும் நித்தியம்

பிரத்யக்ஷமாகா ஒன்றை! அதாவது பிரஸன்னமாகிறன்றை! அதாவது தோற்றமில்லா ஒன்றை தோற்றத்திற்கு கொண்டுவந்தது. யோகமாயாவாகும்!

1. செயல்படா ஒன்று பரம்!
2. செயல்படுத்தியது யோக மாயா!!

யோகமாயாவும், பரசொருபமும், இணைந்து ஓர் உருவானதே, நாமரூப, நாத ஜீவ தோற்றம்.

3. செயல்படாத திரிகர்த்தாக்களும் பரம்!
4. திரிகர்த்தாக்களையும் செயல்படுத்தியது யோகமாயா!!
5. மனித இனத்துடன், அனைத்து ஜீவகோடிகளும், ஆத்ம சொரூ நிலையால் மாகிய செயல்படாத அந்த பரம்!



உ

40

6 மனித இனத்துடன், 84 லட்சம் ஜீவ கோடிகளையும், செயல்பட வைத்தது;

"விஷ்ணுமாயா" என்ற மாயாமன்னம் ஆகும் என, தன்னை உணர்ந்த, ஸ்ரீமஹான்கள் மூலமாக அறிகிறோம்! இதுவே

"பிரம்ம பிரபஞ்ச ரகஸ்யம்"

இது இதுகால பரியந்தம், தேவ பிரம்மரகஸ்யமாக, பாதுகாக்கப்பட்டு வந்தது! இன்று அது உங்கள் "நிமித்தமாக" பிரத்தியக்ஷமானது போலும்!

இது "அது" வாகிய! "அவன்" கிருபையாகும்!

V ஸ்ரீகண்ணனின், ஸ்ரீமத் பகவத்கீதையின், "உள்" கருத்தை, மட்டும் தருகிறோம் உணர்வீர்!

ஒருமுறை, "மெய் உணர்வு" ஆகிய, ஆத்ம உணர்வு, வந்து விட்டால் அதாவது அது பிரகாசித்து விட்டால், திரும்ப, எக்காலத்தும், எந்நிலையிலும், எவ்விடத்தும், எவ்விதத்தும், மாறாது! மறையாது! தேயாது! குறையாது! இது ஸத்தியம். ஆனால்???

பொய்யான, உடல், உலக, உணர்ச்சிகள் இருக்கும் வரை, மெய்யுணர்வு, பிரகாசிக்காது என்பதும், ஸத்தியமே!

கண்ணன்



உ

41

இதற்கு இனியாக ஸ்ரீ மஹான்களின்,

“கனி”வான “பணி”வான வாக்கு

ஒன்றையும் தருகிறேன். உணர்வால் உணர்க.

“நன்றே செய்வாய் நீ!!!

பிழையே செய்வோம் யாம்!

“யாம் இதற்கு நாயகரோ???

எனப் பணிவுடனும், கனிவுடனும், உள்ளடிமையான ஏக்கத் துடனும், கண்ணீர் பெருக்கத்துடனும், ஓர் அன்பர் கேட்கிறார்!

இனி இதன் விளக்கம்:— “மெய் உணர்வு” என்பது, இறை குரு உணர்வுடன் கூடியதாகும்! எந்த “வினையும்” இறை குரு ஸ்மரணையுடன். அவன் அன்றி அணுவும் அசையாது! என்றும், அனைத்தும் அவன் பொருளே! என்றும், அனைத்தும் அவன் செயலே! என்றும், முழுமையாக விட்டுவிடுகையின். இதுவரையில், மாயாமனத்திற்கு ஆதாரமாயும்! ஆதரவாயும்! ஆகாரமாயும்! அமைந்த அஹங்காரம்! அகங்காரம்! அபிமானம்! ஆகிய





"வினையின் தொடர்" இணைங்கள்
நசித்து, நாசமான நிலையில்தான்.
"மெய் உணர்வு" தாமே பிரகாசிக்கும்!
ஜக ஜீவ பொருள்களின் "நாமரூபம்
மண்ணே" என உணராமல், அதன்
இருப்பும், இயக்கமும், அதன் இனிமையும், தோன்றும்வரை
மெய் உணர்வு தோன்றாது என்பதே சத்தியம்!
பொன் பொருள் (பெண் / ஆண்) உறவு, சுற்றம், நட்பு, இவைகள்
இல்லாமல், வாழ முடியாது என்றும், அவர்களுக்காகவே,
நாம் இருக்கிறோம் என்றும், நமக்காகவே, அவர்கள்
இருக்கிறார்கள் என்றும், "ஒட்டுறவு"!
இருக்கும் வரை, மெய் உணர்வு தோன்றாது!

உலகம் ஓர் வாழ்க்கை நாடகமே என்றும், இவ்வுலகம்
ஓர் சாதனை நாடகமல்ல என்ற "ஆணிவேர்"!
உள்ளமட்டும், மெய்யுணர்வு தோன்றாது!

(இதன் கருத்து:– உறவையும், உலகையும், விட்டால்
நம் நிலை என்னவாகும்? நம் குடும்பம் என்னவாகும்?
மோட்சமோ? முக்தியோ? நாம் காணப் போகிறோம்?
ஆனால் உலகை காண்கிறோமே என்று, மறைமயமயக்க போதையே
மேலே சொன்ன ஒட்டுறவும், ஆணிவேரும் ஆகும்)





"உணர்ச்சி" என்பது,
மனம் & உடல் "இணைந்தது"
ஆகும்! எப்படி என்றால்?
இதன் அடிப்படை "தேவை" எண்ணங்களும்,
அதைச் சார்ந்த, செயல்களும் ஆகும்! இவை,
கண்களால் காண்பதிலும், காதினால் கேட்பதிலும்,
உண்டாவதே உணர்ச்சியாகும்! இதை இன்றைய
கலியுகத்தில் "டென்ஷன்" என சொல்வதுண்டு.
அதாவது, வேகத்தோடு கூடிய, பிரச்சனையாகும்!
இவை ஆத்திரம், அவசரம், படபடப்பு, ஆவேசம்,
காமம், மோகம், குரோதம், விரோதம், ஆக்ரோசம்,
தகாத ஓர் வெறி உணர்ச்சி! ஆகிய இந்த பத்தையும்,
ஸ்ரீமகான்கள், உணர்ச்சியின், வெளிப்பாடு எனச்
சொல்வதுண்டு! அந்த சமயம், என்ன செய்கிறோம்?
எப்படி இருக்கிறோம்?
என்ன பேசுகிறோம்? இதில் எதிராளி எப்படி பாதிக்கப்
படுகிறான்? என்று நிலை தெரியாமல், நம்
"தடுமாற்றத்தால்"! அழிவு பாதையை
நோக்கிச் செல்லும் அரக்க குண விருத்தியாகும்!
உணர்ச்சியின் நிலை!
மேலே சொன்னவைகளில், மனம் கெடுபட்டு அந்நேரம்,



(44)

# உடல்!

வரும் கோபாவேசத்தால்

கண்கள் சிவக்கும்! காது வெடைக்கும் வறட்சியாகும்!
நாசி அடைக்கும்! நாவு வாக்கு குளறும்!
உடல் கடும் ஆட்டம் காணும்! கை கால்
உதறல் சோர்வுற்று, அயர்ந்து போகும்! இவை அனைத்தும்
இணைந்த தன்மையால் மனம் உக்ரமும் வக்ரமும் ஆகும்.
இவ்வுணர்ச்சி, மேலோங்கும் போது, சர்வநாசம் உண்டாகும்!
இதை ஒர் அன்பர், எப்படி சொல்கிறார் என்றால்?
நாவும் நடந்து முடிந்தபின்பு; நல்லது
கெட்டது தெரியும் என்றார்! இதில் பிரயோஜனம் இல்லை!
புல்லில் சிதறிய தானியத்தை, பொறுக்க முடியாது!
உடைந்த மண்பானை மீண்டும் உருப் பெறாது!
முட்டையின் வலியை போக்க முடியாது!
இப்படி இன்னும், நிறைய சொல்லலாம். இங்கு கோபாவேசம்
எனக்குறிப்பிட்டது. கோபத்தினால் வரும் ஆவேசம்!
எனப் பொருள்படுகிறது. ஆகவே இங்கு குறிப்பிடும்போது,
ஆத்திரம் அறிவு நாசம்! என்றும், கோபம் சண்டாளன்!
கோபம் பாபம் அறியாது! என்றும், இன்னும் பல நிலை
களில், சொல்வர். இவை எல்லாம் மன வேகத்தினால்,
உடல் தாக்கப்பட்டு, உடல் சுகீனப்படுதாகும்!
இவ் உணர்ச்சிகள், நம்மை தாக்காமல் இருக்க வேண்டு
மென்றால்?



45

உ

மெய் உணர்வோடு இருக்க வேண்டும்!

இதன் அனுபவ பாடமே எது என்றால்?

"காண்பதையும் / கேட்பதையும்" அப்படியே, அது உண்மையென நம்பிவிடக்கூடாது! கொஞ்சம் பொறுமையுடன், காத்திருந்தால், அவசியம் உன் இறை குரு கிருபையால் "முன் / பின்" விளைவு, அவசியம் தோன்றும். இது பிரமாண உண்மையும், இவ்வேளையின், ஸ்வய அனுபவமே ஆகும்.

மேலும் மெய்யுணர்வுக்கு நான்கு மஹாவாக்கியங்களில், ஒன்றான:- "பிரக்ஞானம் பிரம்மம்!" என்பதுவே, உறுதியானதும்! சாதனை மனதிற்கு, "உறுதுணை" ஆனதும் ஆகும்!

ஆரம்ப சாதனை:- எல்லாம் பொய்யே! ஆதலால், ஸ்ரீபகவான் ஒன்றே மெய்! என்ற நிலையில், எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே! என்ற நிலையில், சர்வார்ப்பணமாக "தெய்வ" பிரக்ஞையோடு இரு!

முடிந்த சாதனையில்:- ஸ்ரீ ஸத்குரு கிருபையினால் பெறும் "அத்வைத" ஞானத்தால், மனம் மறந்தானம்



அ.6

நிலையில்; "ஆத்மப்" பிரக்ஞையோடு இரு!

"பிரம்மப்" பிரக்ஞையோடு இரு!

"பரமாத்மப்" பிரக்ஞையோடு இரு!

"பரப்பிரம்மப்" பிரக்ஞையோடு இரு!

ஆனால்???

"நாமரூப, உடல் உலக" சொந்த பந்த பாசப் பற்றின் பிரக்ஞையாக இராதே!

என்றும், ஆணித்தரமாக சொன்னார்கள்!

பிரக்ஞையோடு, இரு என்றால், மெய் உணர்வோடு இரு! எனப் பொருள்படும். அதே போல் நாமரூப, உடல் உலக, பிரக்ஞையோடு இராதே என்றால்; "உடல்" உணர்ச்சிகளுக்கு, அடிமையாகாதே! எனப் பொருள்படும்! இதன் தாத்பர்யம் என்னவென்றால்; "மெய்உணர்வுடன்" கூடிஇருந்தால், பொய் உடல், உலக உணர்ச்சிகள், நசித்து நாசமடையும்.

உடல் உலக "உணர்ச்சி"களுக்கு, அடிமை ஆனால், மெய்யுணர்வு "மறைந்து" இருக்கும்!

மெய்யுணர்வு, அழிவதில்லை! அதுபுதிதாக தோன்றுவதும் இல்லை! தேடி வருவதும் இல்லை. எப்போதும் அது குறையாமல் இருக்கிறது இதைத்தான், எம் ஸ்ரீ அபிராமி பட்டர் சொன்னார். (சூரியனை மேகம் மறைப்பது போல், உணர்ச்சிகள் உணர்வை மறைக்கும்)



(47)

"நன்றே" வருகினும், "தீதே"
(தீயது) விளைகினும்! யாம் அறிவது,
ஒன்றேயும் இல்லை! (இவ்விரண்டையும்,
யாம் அறிய விரும்பவில்லை என்றும், அது தேவையில்லை
என்றும்,) என சொல்லிவிட்டு, அன்றே "பரம்"
என, உனக்கு விட்டு விட்டோம்! என சர்வார்ப்
பணத்தில், தம்மை கரைத்துக் கொண்டார்.
நம் உள்ளாம்பான்மையை, அதாவது நம் சாதனையை,
அனுசரித்து, நன்மை நம்மை, தேடி வருகிறது!
என்றும், தீயது நம் பழக்க, வழக்க, தோஷ குணங்களை
அனுசரித்து, அப்போதைக்கப்போது "தோன்று
கிறது" என்றும், உறுதியாகச் சொன்னார்.
இதற்கு முன்பு சொன்ன, பிரக்ஞானம் பிரம்மம்!
இங்கு பொருந்தும்!
என்ற மஹா வாக்கியம் ↑ உணர்ந்து யாரும் போதும்!
மேலும் ஓர் அன்பர், பிழையே செய்வோம் யாம்!
நன்றே செய்வாய் நீ! என்றும்,
என்றும்,
↑ உறுதியாக கூறிவிட்டு, "யாம்" இதற்கு "நாயகன்!"
என்றும், மிக, மிக மிக, மிக, பணிவுடனும், உள்ள
உருக்கத்துடனும், கண்ணீர் பெருக்கத்துடனும்,
ஏங்கித் துடி துடித்து, கதறி அழும் "குழந்தை"
உள்ளத்துடனும் கேட்கிறார்.



யாம் இதற்கு காரணம் இல்லை என்றார்

இதில் என்ன உண்மை, மறைந்திருக்கிறது என்றால்? முன்பே, பல இடங்களிலும், பலமடல்களிலும், கூறி இருக்கிறேன், அதை திரும்பவும், ஞாபகப்படுத்துகிறேன் உணர்க!

"தெய்வம்" என்றால் "கருணை" என்றும்,

"கருணை" என்றால் "தெய்வம்" என்றும்,

அதே தெய்வம், கருணைப் பிரவாகம் என்றும்,

கருணை சமுத்திரம் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

தண்டிப்பும், தண்டிப்பும், பாரபட்சமும் இருந்தால், அது தெய்வமல்ல. இது சத்தியம்!

இதை ஓர் அன்பர் சொல்லும் போது?

"நஞ்சும் கொடுக்க தாயகம்"

"கங்கணம்" என்ற உறுதியின் காப்பு

"கட்டிக்கொண்ட மருந்து"!

நல்ல மருந்திம் மருந்து, சுகம் நல்கும்,

வைத்திய நாதமருந்து எனும்பாடிறார்

இதில், எதை உணர்த்துகிறார், என்றால் "நன்மை" ஒன்றாகத்தவிர "தீமை" இல்லவே இல்லை என்பதே சத்தியம்!



உ



எம் வள்ளலார் பாடும் போது:-

நல்லார்க்கும்! பொல்லார்க்கும்!

"நலம்" கொடுக்கும் "நலமே!"

நரர்களுக்கும்! சுரர்களுக்கும்!

"நடு" நின்ற "நடுவே!"

எல்லார்க்கும் பொதுவில்!

"நடம்" புரிகின்ற "நடமே!"

எம் அரசே! யாம் வேண்டுதல் கேட்டு அருளே!

என உருக்கமாக பாடியுள்ளார். நல்லவன்தீயவன்!

புண்ணியவான், பாவி! பண்டிதன்பாமரன்! பணக்காரன்,

ஏழை! ஞானி பக்தன், அஞ்ஞானி! என "பேதம்"

பார்ப்பதில்லை, ஸ்ரீ பகவான்.

ஆகவேதான், அந்த அடியார் பாடும்போது!

"நன்மையே" செய்வதுதான் உன் ஸ்வபாவம்!

"தீமையே" செய்வதுதான், எம் பழக்க வழக்கம்!

ஆனாலும் இதற்கு "யாம் பொறுப்பு" இல்லை!

என்கிறார் உறுதியாக! இப்படி உறுதியுடன்,

சூத்திரகாரணம், என்ன வென்றால்?

முழுமையாகவும்! முடிவாகவும்! பிரமாணமாகவும்

சொல்கிறேன்: "யாம் உன் குழந்தையே!"

இது சத்தியம்! இதுசத்தியம்! இது சத்தியம்!!!



உ

ஆனலும் யாம் விளையாட்டு பொருளையே!
யாம் விளையாட எடுத்த
"உடலே" புண்ணியபாவ,
மூட்டையாகும்! அப்புண்ணியபாவம்,
எம் "கவனக் குறைவால்"
எம்மைப் பற்றிய "மாயாமனதின்"!
தாக்கு ஆகும்! அக்கணக்கும், எம் அறியாமையினால்,
வந்த உன் பொருளாகவும்! உன் இயக்கமாகவும்! இருந்
தாலும், எம் மனமடமையால், நான், என்றல்;
எனது என சொந்தம், கொண்டாடிய தன்மையால்
அவ்வினை, எம் தாவத்தை சார்ந்து, விட்டதுதான்!
ஆனால் அக்கணக்கு, எம்மைச் சாரவில்லை! யாம்
உன் அம்சமாகவும், உன்குழந்தையாகவும், இருப்
பதால் "அக்கினியில்புழு" பற்றுமா??
(நெருப்பில் புழு உண்டாமோ? அதில் நிற்க முடியுமா?)
முடியவே முடியாது என்பது, பிரமாண உண்மையாகும்.
எம் கவனக்குறைவால், உடலில் அபிமானம் கொண்ட
தன்மையினால், எனக்கு வந்து விட்டதே!
நான் கஷ்டப்படுகிறேனே! என "பிதற்றிக்
கொண்டு" சிலகாலம், மனமே அவஸ்தைப்பட்டோம்.



உ

51

ஸ்ரீ ஸத்குரு இறைவனாய் அமர்ந்தே

அவஸ்தை நீங்கி, பரிபூரணமானோமே!

ஆகவே யாம் பிழையே செய்வோம்!

எனச் சொன்னது, எம் "மனமே"

"மயக்கப்" புலம்பலாகும்!

"யாம் பிழை" செய்யவில்லை, என்பது ஸத்தியமே!

"எம்மனம்" பிழை செய்தது, என்பது ஸத்தியமே!

எம் மனதை ஸ்ரீ பகவான் எடுத்துக் கொண்டான். எம்மனதை, ஸ்ரீகுருதேவர் ஏற்றுக் கொண்டு மறைத்தாக்கி விட்டார்.

இன்னொரு இடத்தில், அன்பர் என்ன சொல்கிறார் என்றால்?

"எம்மை" போல் "பிழை" செய்வார் யாருமில்லை. என்றும்

"உன்னை" போல் "பொறுக்க" வல்லாரும் உண்டோ? எனவும் கேட்கிறார்.

ஓம் அன்பின் மழலைகளே! இம்மடலில், ஸ்ரீமத் பகவத் கீதையின், "ரஸாம்சம்" சிலவற்றை

அவன் உரைக்க, அவன் மேலே எழுத, அவன் கையின் பதுமை இயங்க, பிரம்மபிரபந்த ரகஸ்யத்தை, ஸ்ரீஸத்குரு வரிவடிவில், சில விளக்கம் கொடுக்க, இது

பூரணமாக பூர்த்தி ஆனதாக தோன்றுகிறது!

எல்லாம் நலமே! இருப்பது ஒன்றே!

பாபா.

எல்லாம் நீயே! நடப்பது நலமே!



# "இறைகுரு" வாக்கியம்.

# "பிரம்ம, பிரபஞ்ச, ரகஸ்யம்"!!!

# "சிறப்பிதழ்"!!!

ஓம் ஆத்மானந்த குழந்தைகளே! நாம, ரூப, குணம், குறி, காலம், தேசம், வர்த்தமானம், மனம், வாக்கு, காயம், என இப்பத்திலும், உணர முடியாததும், உணர்ந்து முடியாததுமான, காலாதீத அந்த "ஒன்று"! தமக்குத் தாமே ஓர் காலத்தை ஏற்படுத்திக் கொண்டு, அதிஅதிசூட்சும தோற்றத்தினில், தாமே "சதாசிவம்!" ஆகவும்: "மஹேசனும்!" தோன்றியதாக, ஸ்ரீமஹான்கள் சொல்வார்கள்.

சதாசிவம்:— சர்வ சதாவும், எந்த விநாடியும், ஓரியல்பாக, பரப்பிரம்மானந்த ஸொரூப நிலையில், ஆனந்த சிவமாக (பரசொரூபமாக) இருக்கும் தன்மையினால், அதை சதாசிவம், எனக் கூறுவர்!



உ



மகேசன் :— மகத்து என்றால் அந்த ஒன்றே! அம்மகத்தே, ஜகத்தாக தோன்றும்போது, அனைத்து, **சூரிய, சந்திராதிகளும்,** கோடானு கணக்கில் அடங்கா, கோடி கோள்களும், அவற்றில் இயற்கையாக அமைந்த, சமுத்திரம், நதி, மற்றும் மண், மலை, மரம், செடி, கொடி, புல் பூண்டு, ஆகிய அனைத்தும், மகத்தில் தோன்றிய ஜகத்தாகும். மேலே கூறிய, மகத்துக்கு எல்லாம் "**அதிபதி**" ஆனவனே, மகேசன் ஆகும்!

சதாசிவமும்! மகேசனும்! அதி அதி சூட்சுமம்! அந்த ஒன்றின் அம்சம், "**பரிபூரணமாக**" பொருந்தியவர்கள் ஆகும்! (அதுவே ஆனவர்கள்.)

இவ்விருவரும் அதி அதி "**சூட்சும நாமங்கள்**" உடையவர்கள் என்று தன்னை உள்ளபடி உணர்ந்த ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

இவ்விருவரின் "**நிஷ்டை, யோகமாயா!**" ஆகும்.

(1) அந்த ஒன்று, இயங்க முடியாதென்றும், இயங்கக்கூடாதென்றும், இயங்க இயலாதென்றும், உரைவேண்டும்! (அந்த ஒன்றிலிருந்து)"

(2) அவ்விருவரும், அதிலிருந்தே, **இயக்கத்திற்காகவே** வந்தவர்களாகும்.



# உ

(3) அவ்விருவருக்கும், இயக்க விளையாட்டிற்கு, "பொருள்" வேண்டும்!

(4) காலாதீத அந்த ஒன்றே சொல்ல வொண்ணா, விளக்க வொண்ணா, எழுத வொண்ணா, ஓர் அரிய பொருளாகும்!

(5) இவ்விருவரும், "உண்டு" என, சொல் விளக்கத்திற்கு மட்டும், உரியவர்கள்!

(6) இவர்களின், நிழலாகிய மாயாவே "பசை" போன்ற நிலையில், "இணைப்பையும்!" "பிணைப்பையும்" உண்டு பண்ணத்தக்க வாக்கியத்திற்காக ~~யோகமாயாவான~~, "ஆகாயம்" என ஒன்றே!

(7) காலாதீத அந்த ஒன்றின், கருணையால், "அருள்" "ஆற்றலையும்"! ஆறுவது வாக்கியத்தில், சொன்ன யோகமாயாவையும், இணைத்து, பிணைத்தார்கள்!

(8) இவ்விரண்டையும், இணைத்த நிலையில், அந்த "மஹத்தை ஜகத்து" என ஆக்கிவிட்டார்கள்.

இப்போது, இவ்விரண்டும், இணைந்த நிலையில், ஸ்தூலமாவரும் வஸ்துவானது! அதை "ஜடம்" என ஸ்ரீ மஹான்கள் கூறுவர். ஜடம் என்பது உயிர் உணர்ச்சியற்றது.



உ



9 காலாதீத பரசொரூபமும்! யோக மாயாவும்! இணைந்ததே, அண்டாண்ட பிரம்மாண்ட, சூரிய சந்திராதி, அளவிடற்கரிய "கோடானு கோடி"! கோள்கள் என்னும் உலக கூட்டங்களாகும் என, ஸ்ரீ மஹான்களின் வாயிலாக, அறிகிறோம்!

10 மேலே கூறிய, ஒன்பதாவது நிலையில், கூறிய அனந்தும், ஸித்பரம் என்றும்; ஸின்மயம்! ஸின்மாத்ரம்! ஸிதாகாயம்! ஸித்சொரூபம்! என இன்னமும், அனேக நிலைகளில், ஸ்ரீ மஹான்களால், அவர்கள் அனுபவத்தில், கூறும் "ஸத்தாகிய/ஸித்தே" ஆகும்!

ஸத் என்றால் "அசைவு" இல்லாத ஒன்றாகும்!

ஸித் என்றால், அசைவதும்; அசைவிப்பதும் ஆகும்!

11 மேலே கூறிய, ஒன்பதாவது நிலையில், கூறியபடி, அனந்தும் "காலாத்த பரமும்" & யோக மாயாவும் (ஆகாயமும்) (ஜடகபடாதிகள்) இணைந்து பிறந்த "ஜட ஜகஜ்ஜீவ, பட வர்க்கங்களின், சரீரங்களும், மற்றும் தாவர வர்க்கங்களும் அனந்தம் "நாமரூப" தோற்றங்களாகும்!



உ

12. இவ்விரண்டும், இணைந்து, பிணைந்து, ஒருவனான தன்மையிலே, இது "துவைதம்" எனப்பேசப்படுகிறது

13. அனுபவ ஞானிகள், கூறும் ஸத்திய வாசகமான, "எல்லாம் ஒன்றே" எனச் சொல்வது, மேலே கூறிய நிலையில், ஸத்தியமாக பொருந்தும்.

14. ஆகவே இங்கு, நாம ரூப "பேதத்தால்" குண பேதம் "மாயா" மனதால் கல்பிதம் பண்ணப்படுகிறது.

15. அக்கல்பித குண பேதத்தால் "புண்ணிய பாபம்" என்ற நிலையில், ஜனன மரணத்தின் சுழற்சியாய் அமைகிறது!

16. இவை ஓர் பக்குவ ஆன்மாவால், உணர்ந்த நிலையில், "பக்தி" பூர்வமாக முன் சொன்னபடி, சர்வார்ப்பணமாக எல்லாம் நீயே! உன்னால்! உன்னுடையதே!' என அமைந்தால் "வினைகள்" முடிவுறும்!

"ஆன்ம" சாதக நிலையில், எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யானே! அது நீயே! என அமைந்தால், அங்கு "மனம்" "அஹங்காரம்! வினையும், மனமும், நாசமான போது, அது ஜீவன் முக்தியே! இதுவே தன்னை அறிந்துணர்ந்த, ஸ்ரீமஞானிகளின் அனுபவமாகும்!



57

உ

"மெய்"க்கு "பொய்" விளக்கம்!
இது நம்பிக்கைக்கு, ஓர் உதாரணம் ஆகும்!
இது உதாரணமே தவிர, உண்மை இல்லை!

"மண்" என்றால் "பரசாரூபம்"
எனக் கொள்க!

"ஜலம்" என்றால் "யோகமாயா"
எனக் கொள்க! (யோகமாயா என்பது, ஆகாயமாகும்)

"மண்"ணுக்கு "பசை" இல்லை யென்பதே உண்மை!

"ஜலத்திற்குப்பசை" உண்டு என்பதே உண்மை.

இதில் எந்த "ஒன்று" இருந்தாலும், பிரயோஜனம் இல்லை!
ஒன்றுடன் ஒன்று,
இவ் "இரண்டும்" இணைந்தால் மட்டுமே,
"நாமரூபம்" வெளிபடியும், என்பதே உண்மை!

ஆதலே, நாமரூப, ஜக ஜீவ, தாவரவர்க்கங்கள்,
அனைத்தும், தோன்றக்காரணமாக, அமைந்தது,
மண்ணும், ஜலமும், (பரமும், யோகமாயாவும்)
இணைந்ததே என, ஸ்ரீ அநுபவம் ஹான்கள் வாயிலாக அறிகிறேன்
இதுவே பிரமாண, உண்மையாகும்!



உ



இதில், இது வரை கூறிய படி, இவைகளையே, **ஆயங்கள்** **64** என்றும், அவை **16** என ஸ்ரீமஹான்கள் சொல்லியுள்ளனர்.

“**மஹேசன்**”:— இவனை மஹேஸ்வரன் என்றும், அழைக்கலாம். இதன் உண்மையான பொருள் :— முன் சொன்ன நிலையில், மறுத்துச் சொல்லாத “**ஈசன்**” ஆகும்! ஈசன் என்றால், ஈர்ஷிக்கப் பட்டவன்! என்றும், ஈர்ஷிக்கப் படுத்துபவன்! என பொருள்படும்! அதாவது?

“**ஜகதீஸ்வராதி**”! (திரிகர்த்தாக்கள்) களால் கவர்ந்து இழுக்கப் பட்டவன் என்றும், மேலே கூறியவைகளை, **தாமே** கவர்ந்து இழுக்கிறான் என்றும் பொருள் கூறுவர்! இப்படி ஒன்றுடன் ஒன்று பிணைந்து இணையப் படுவதாலேயே (மாயாவும், மனமும், இணைந்து பிணைவதாலேயே) உலகம் இருப்பும், இயக்கமும், சக்தியமாக தோன்றுகிறதென்று ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேளீர்!

“**பரம குரு**”!!!

“**பரமாத்மா**”!!!

**பாபா.**


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!